தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 8 இதழ் : 9 ஜூலை – 2012

செய்திமலர்



## பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பின் பணியில் 23 வது ஆண்டில்...

"... நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை"
அப். 26:19

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. பிரகாஷ் K. கராசியா

ஹமீர்புரா, இராஜஸ்தான்

என் பெயர் பிரகாஷ் கராசியா. நான் ஒரு பீல் ஆதிவாசி குடும்பத்தில் பிறந்தவன். என்னுடைய குடும்பத்தார் இறந்த ஆவிகளையும் துர் தேவதைகளையும் வணங்குபவர்கள். நாங்கள் சாராயம் குடிப்பது, சண்டை போடுவது போன்ற தீய காரியங்களைச் செய்து அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தோம். நானும் தம்பாக்கு, பீடி போன்றவைகளுக்கு அடிமைப்பட்டு துன்மார்க்கமாய் வாழ்ந்து வந்தேன். பாவம் என்றாலே என்னவென்று அறியாமலும், யாரையும் மதிக்காமலும் மனம் விரும்பினதைச் செய்து வந்தேன். ஆனாலும் எனக்குள் சமாதானமில்லாமல் வாழ்ந்து வந்தேன். மேலும் பிசாசின் பிடியினாலும் அவதிப்பட்டு வந்தேன்.

மனம் சோர்ந்து போயிருந்த வேளையில், ஆண்டவரின் ஊழியம் செய்து வரும் ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. நாத்துலால் டாமோர் என்னை சந்தித்து, ஆண்டவரைப் பற்றி எனக்குக் கூறினார். ஆண்டவரிடம் என் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து ஜெபித்தேன். என்னைப் பிடித்திருந்த அந்தகாரம் நீங்கி, எனக்குள் சமாதானம் நிலவத் தொடங்கியது. என்மூலம் என் குடும்பத்திலும் சமாதானம் கிடைத்தது. நாள்தோறும் எனது ஆவிக்குரிய வாழ்வு மலர்ந்தது.

ஆண்டவரை ஆராதிக்கும்படியாக சபைக்கு ஒழுங்காக செல்ல ஆரம்பித்தேன். ஓர் நாள் ஆண்டவர் ''எழுந்திரு என்னுடைய ஊழியத்தைச் செய்'' என என்னோடு பேசி தம்முடைய ஊழியத்தினைச் செய்யும்படியாக அழைத்தார். கொஞ்சம் தயக்கத்தின் நிமித்தமாக தாமதித்தேன். ஆனாலும் ஆண்டவர் என்னை மீண்டும் அழைத்தார். தரிசனத்தில் ''போ எனது ஊழியத்தைச் செய்'' என கட்டளையிட்டார். என்னை முற்றிலுமாக தேவனுக்கு அர்ப்பணித்தேன். எனது ஊழியரின் பரிந்துரையின் பேரில், ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஒரு மாதம் குறுகிய கால வேதாகமப் பயிற்சியும் பெற்றுக் கொண்டேன். அந்தப் பயிற்சியின் போது, அநேகக் காரியங்களை தேவன் கற்றுக் கொடுத்தார்.

பயிற்சிக்குப்பின் எனது சொந்த கிராமத்தில் எனது வீட்டில் ஜெபக்கூட்டம் தொடங்கினேன். கொஞ்சம் கொஞ்சமாக ஆத்துமாக்கள் வருகிறார்கள். குறைந்தது 10 ஊழியர்களையாவது உருவாக்க வேண்டும், எனது கிராமம் தேவனுக்குள் வரவேண்டும். ஒரு பெரியக் கூட்டத்தை தேவனிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பது என்னுடைய ஊழியத்தின் பாரமாகும். தேவன் அதற்காக என்னையும் என் குடும்பத்தையும் பயன்படுத்துவாராக. தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. John Velusamy, Sivakasi**

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும் தேவ கிருபையினாலும், நமது ஷாலோம் ஊழியங்கள் பீல் மக்கள் மத்தியில் **22 ஆண்டுகளை** நிறைவு செய்து, **ஜுலை 1ம் தேதி 23வது ஆண்டிற்குள்ளாக** அடியெடுத்து வைக்கிறது. ஊழியங்களை நிறைவேற்ற கிருபை தந்த தேவனை துதிப்போம். இன்னும், 36 மாதங்களில் (3 வருடங்களில்) அதாவது **25 ஆண்டுகள்** ஊழியப்பாதையில், 10 இலட்ச ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாகவும், ஆயிரம் ஆயிரம் திருச்சபைகளை உருவாக்கும்படியாகவும் தரிசனத்துடன் செயல்பட்டுவரும் எங்களுக்காக ஜெபியுங்கள்.

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் கடந்த ஜுன் மாதம் முழுவதும் ஊழியங்களை நடத்த தேவன் கிருபை தந்தார். குறிப்பாக அனைத்து சபைகளிலும் 30,000க்கும் அதிகமான ஆதிவாசி சிறுவர்களுக்கு CBC (VBS) ஆசீர்வாதமாக நடத்தப்பட்டது.

ஜுன் மாதம் குஜராத்திலும், ஜுலை மாதத்தில் இராஜஸ்தான், மத்தியபிரதேசத்திலும் பள்ளிக் கூடங்கள் ஆரம்பித்துள்ளன. 10th, 12th மாணவர்களில் அநேகர் 70% முதல் 80% மதிப்பெண்கள் பெற்றிருப்பதைக் கண்டு தேவனைத் துதித்தோம். மேலும் 31 மாணவர்கள் கல்லூரிகள் மற்றும் கல்விப் பணி, மருத்துவப் பணிக்கான பயிற்சிக்காகவும் சேர்ந்துள்ளார்கள். உயர் படிப்பிற்காக நிதிவுதவி செய்ய சுமார் ரூ. 5 இலட்சத்திற்கும் அதிகமான தேவையுள்ளது. சுதேச ஊழியர்களின் கல்விப்பணிக்காக ஜெபித்து இயன்றவரை தாங்க முன் வர வேண்டுகிறேன்.

தேவ கிருபையால் 08–07–2012 திங்கள் அன்று எங்களது வாழ்க்கையில் 28 வது திருமண நாளை காண தேவன் கிருபை தருகிறார். கடந்த 27 வருடங்களாக தேவன் எங்கள் குடும்பத்தின் மூலம் பீல் ஜாதி மக்கள் ஆசீர்வாதத்திற்காக தெரிந்தெடுத்தபடியால் தேவனை துதிக்கிறோம். எங்கள் குடும்பத்தை தேவன் முற்றிலுமாக பயன்படுத்த அர்ப்பணித்த எங்களுக்காக ஜெபியுங்கள்.

மேலும் தேவ கிருபையால் 30.05.2012 அன்று எங்கள் அன்பு மகன் **கிளாட்சன் டைட்டஸ்** **–**க்கும் சிவகாசியைச் சேர்ந்த **மெர்லின் சார்லட்** **–**க்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. தேவ சித்தத்தின்படி ஆகஸ்ட் 6ம் தேதி திங்கட்கிழமை தூத்துக்குடியில் திருமணம் நடைபெற உள்ளது. அனைவரும் ஜெபிக்கவும் பங்குபெற்று மணமக்களை ஆசீர்வதிக்கவும் மிக அன்புடன் கேட்கிறேன்.

**"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து.... பெருகவே பெருகப்பண்ணுவேன்"... ஆதி. 22:17**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# தேவனிடத்திலிருந்து வரும் பரம தரிசனம்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

"... Sôu AkRI TWUR¬N] jÕdÏd ¸rT¥VôRY]ô«ÚdL®pûX" அப். 26:19

சர்வ வல்லமையுள்ள தேவன் சாதாரன மனிதர்களுக்கு தம்முடைய பரம தரிசனத்தைக் கொடுக்கும் போது அவர்கள் தேவனுக்காக மிகப் பெரிய காரியங்களை செய்கிறார்கள். தரிசனமும் அழைப்பும் பெற்று செய்யப்படும் ஊழியங்களில் பெரிய வித்தியாசத்தைக் காண முடியும். தேவனே உடன் நின்று ஊழியங்களை நடத்துவதை காணலாம். ஆனால் அநேகர் தேவன் இப்படி தரிசனம் தந்தார் என்று சொல்லி தங்கள் வாழ்வில் ஏமாற்றப்படுவதை, வஞ்சிக்கப்படுவதைக் காண்கிறோம். பலர் ஊழியத்தை ஆரம்பித்துவிட்டு நடத்த இயலாமல் விட்டு விடுவதையும், சோர்ந்து விடுவதையும், வழிவிலகிப் போவதையும் கஷ்டங்கள் அனுபவிப்பதையும் காண்கிறோம்.



ஒருமுறை டாக்டர். **டி.ஜி.எஸ் தினகரன் ஐயா** அவர்கள் இயேசு அழைக்கிறார் வல்லமை பயிற்சி முகாமில் இவ்வாறு கூறினார்கள். "அநேக ஊழியக்காரர்கள் அநேக கஷ்டத்துடன் பாரத்துடன் ஜெபிக்க வருவார்கள். நான் ஜெபித்து அவர்களுக்கு முடிந்த காணிக்கையை கொடுத்து அனுப்புவேன். ஆனாலும் என் மனம் உடைந்து போகும். ஒரு நாள் நான் இயேசுவை தரிசித்தபோது அவரிடம் நான் பாரத்துடன் கேட்டேன்.

ஏன் ஆண்டவரே உம்முடைய ஊழியத்தை செய்யும் ஊழியக்காரர்கள் இத்தனை வேதனைப்படுகிறார்கள் என்று கேட்டபோது ஆண்டவராகிய இயேசு சிரித்துக் கொண்டே சொன்னார். நான் இவர்களை ஊழியத்திற்கென்று அழைக்கவே இல்லை. அவர்களே என் பேரில் கொண்ட வைராக்கியத்தினால் நான் அவர்களுக்கு கொடுத்த நல் ஆசீர்வாதங்களை விட்டுவிட்டு ஊழியம் செய்ய வந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் தேவைகளை மட்டும் அவ்வப்போது பூர்த்திசெய்கிறேன். என் சித்தமின்றி காரியங்களை செய்வதால் கஷ்டங்களை அடைகிறார்கள். **"நான் சர்வவல்லமையுள்ள தேவன் நான் ஒருவனை அழைத்தால் நான் அவருடன் இருந்து பெரிய காரியங்களை செய்வேன். நான் மோசேயோடு இருந்து எப்படி நடத்தினேனோ அப்படியே வழி நடத்துவேன். கனப்படுத்துவேன். தேவைகளை சந்திப்பேன் என்று இயேசு கூறினார்"** என மிக அழகாக கூறினார்கள். ஆகவே தேவன் தரிசனம் தந்து நடத்தும் ஊழியர்களை ஊழியங்களில் அவர் சித்தம் நிறைவேற்ற பயன்படுத்துகிறார்.

### *தரிசனம் என்பது*

தரினசம் என்றால் ஏதோ தூங்கும்போது நினைவுகளெல்லாம் கலந்து கனவுகளாக வருவதோ அல்லது அர்த்தமற்ற சொப்பனங்களாக காணுவதோ அல்ல. தேவன் தரிசனம் தரும் வேளையில் பரலோகத்தில் வீற்றிருக்கும் அவர் பூலோகத்தில் எதை செய்யவேண்டும் என்று விரும்புகிறாரோ அதைச் செய்வதற்கு மனிதனைத் தேடி வருகிறார். அவர் திட்டத்தை வெளிப்படுத்தி அவன் மூலமாக நிறைவேற்றுவதற்கு அவனுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார். அதுதான் தேவன் தரும் பரம தரிசனம், பரலோக தரிசனமாகும்.

### *தேவனிடத்திலிருந்து வரும் தரிசனம்*

வேதத்தில் நோவாவுக்கு தரிசனமாகி பேழையை உருவாக்க சொன்னார். ஆபிரகாமை விசுவாசிகளின் தகப்பனாக மாற்ற தரிசனம் தந்தார். சொந்த ஜனத்தை மீட்பதற்கு மோசேக்கு முட்செடியில் தரிசனமானார். புறஜாதிகளை தேவனண்டை நடத்துவதற்கு பவுலுக்கு தரிசனமானார். அதைப்போல் பரிசுத்த ஆவியானாவர் இந்த கடைசிக் காலங்களில் தம்முடைய நற்செய்தி பணியை நிறைவேற்ற மணவாட்டியாகிய சபையை கட்டி எழுப்பி அவர் வருகைக்கு ஆயத்தமாக்க அநேக ஊழியங்களையும் ஊழியர்களையும் பேர் சொல்லி அழைத்து தம் சித்தத்தின்படி பயன்படுத்தி வருகிறார்.

என் வாலிபப்பிராயத்தில் இந்த உலகத்தில் எனக்கு சமாதானம் இல்லை. என்னை நேசிப்பதற்கு உலகில் யாரும் இல்லை. இனி உலகில் வாழ வேண்டாம் என்று விஷம் குடித்து உயிரை மாய்த்துக்கொள்ள செயல்பட்டேன். ஆனால் தேவ கிருபையினால் உயிர் பிழைத்தேன். இனியும் ஏன் வாழவேண்டும் என்ற நிலையிலிருந்தபோது கோவையில் அன்பு போதகர் ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் சபையில் ஞாயிறு ஆராதனையில் தேவன் என்னை தேவதாஸ் என்று பெயர் சொல்லி அழைத்து ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக மாற்றுவேன். அப்போஸ்தல ஊழியத்தை தருவேன் என்று இப்போது நடைபெறும் ஷாலோம் மிஷனெரி பணியை 1980 ஆம் ஆண்டு 32 வருடங்களுக்கு முன்பாக தீர்க்கதரிசமாக கூறினார்.

1982 முதல் ஊழியப் பாதையில் தேவன் மிஷனெரியாக பயன்படுத்தினார். 1985–ம் ஆண்டு ஜீலை 8–ம் தேதி (27 வருடங்களுக்கு முன்பு) திருமணமான பின்பு எந்த ஜாதி மக்கள் என்று ஜெபித்தபோது என் மனைவி வஹிதாவுக்கு தேவன் கைகளில் வில், அம்பு வைத்திருக்கும் பீல் ஆதிவாசி மக்களை தரிசனமாகக் காட்டினார். எனவே அந்த பரம தரிசனத்தை ஏற்றுக்கொண்டு திருமணமாகி 40 நாட்களில் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக ஒப்புக்கொடுத்தோம். 5 வருடங்களில் இந்திய மிஷனெரி சங்கம் மூலமாக பணிகளை நிறைவேற்றி, தேவ நடத்துதலின்படி, ஷாலோம் ஊழியங்களை 1991–ம் ஆண்டு ஆரம்பித்து, 20 ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை செய்துள்ளார். பரம தரிசனம் தந்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

## *தரிசனமும், கீழ்ப்படிதலும்*

தரிசனங்களை தேவன் தரும்போது பெரிய திட்டங்களை தேவன் அறிவித்தாலும் ஒவ்வொரு அடியாக தேவன் நடத்தி செல்கிறார். அதற்கு கீழ்ப்படிதலை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

**நோவா** – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார் – முழுக் குடும்பத்தாரும் விசுவாச பேழை மூலமாக இரட்சிக்கப்பட்டார்கள்.

**ஆபிரகாம்** – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார் – பூமியிலுள்ள வம்சங்களுக்கெல்லாம் ஆசீர்வாதமாக தேவன் வைத்தார்.

**மோசே** – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார் – சொந்த இஸ்ரேல் ஜனங்களின் மீட்பின் பணியில் பயன்படுத்தினார்.

**பவுல்** – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார் – புறஜாதிகளின் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கவும், சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் கிருபை செய்தார்

ஒருநாள் மட்டுமல்ல முழு வாழ்க்கைப் பாதையிலும், ஊழியப்பாதையிலும் ஒவ்வொரு காலக் கட்டங்களில் தேவன் அதை எதிர்பார்க்கிறார். ஆபிரகாம் கீழ்ப்படிந்து தேவன் எவைகளை விட்டுவிட கூறினாரோ அவைகளை விட்டு தேவன் சொன்ன இடத்திற்கே போனார். மட்டுமல்ல அவர் வாழ்வில் தேவனுக்குக் கீழ்ப்படிதலை முதல் காரியமாக வைத்தார். ஒரே பேறான குமாரன் ஈசாக்கை பலியிட சொன்ன போதும் கீழ்ப்படிந்து நடந்தார்.

ஷாலோம் ஊழியப்பாதையிலும் அப்படித்தான். இந்திய மிஷனெரி சங்கம் ஸ்தாபனத்தில் உண்மையாக 5 வருட ஊழியத்திற்குப் பின்பு, தேவனையே சார்ந்து ஜாலோத்தில் ஊழியம் ஆரம்பிக்கும்படி தேவன் கூறினார். ஊழியங்கள் வளரும் போது பீல் சதேச ஊழியர்களை எழுப்ப கூறினார். கீழ்ப்படிந்தோம். இன்று சுமார் 500 பீல் சுதேச ஊழியர்களைத் தந்துள்ளார். அவர்களிடமிருந்து காணிக்கை முழுவதும் வாங்காதே என்று கூறினார். அப்படியே கீழ்ப்படிந்தோம். அவர்களே மிஷனெரி பணிக்கு காணிக்கை கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். வேறு இயக்கத்திற்கு சபை பிரிவுகளுக்கு சபைகளை கொடுக்க வேண்டாம் என்று ஆவியானவர் கூறினார். அதற்கும் கீழ்ப்படிந்தோம். இன்று Shalom Diocese in India வை உருவாக்க தேவன் கிருபை தந்தார்.

ஊழியப்பாதையில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவன் எங்களிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தார். நாங்கள் சிறிதளவும் ஐயப்படாமல் கீழ்ப்படிந்த போதெல்லாம் தேவன் அவர் சித்தப்படி ஊழியங்களை வளரச் செய்வதை காணமுடிகிறது. பிரியமானவர்களே, நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். ஒவ்வொரு முறையும் ஆவியானவர் மூலமாக, வசனங்கள் மூலமாக, தேவதாசர்கள் மூலமாக நம்மோடு இடைபட்டு பேசும் போதெல்லாம் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம். ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

## தரிசனமும் விசுவாசமும்

தேவன் தரிசனத்தை கொடுக்கும்போதெல்லாம் நாம் அதை விசுவாசிக்க வேண்டும். விசுவாசிக்கும்போது தேவன் பெரிய காரியங்களை செய்வார். ஆபிரகாம் வாழ்க்கையில் வேதம் சொல்கிறது ***அவன் தேவனை விசுவாசித்தான் அதை நீதியாக தேவன் ஏற்றுக்கொண்டார்.*** ஆபிரகாமின் விசுவாசத்தை ரோமர் 4:17–19 வரை வாசிக்கும்போது நம் தேவன் (1) இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல அழைக்கும் தேவன் (2) மரித்தோரை உயிர்ப்பிக்கும் வல்லமையுள்ள தேவன் என வாசிக்கிறோம். ஒரு பிள்ளைகூட இல்லாதபோது வானத்தின் நட்சத்திரங்களைப்போல வர்த்திக்கப்பண்ணுவேன் என்று வாக்குரைத்த தேவனை ஆபிரகாம் விசுவாசித்தான். வானத்திலுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தன்னை ‘அப்பா’ ‘அப்பா’ என்று அழைப்பதுபோல விசுவாசித்தான். அதுபோல தன் சரீரம் செத்துப் போனதையும் மனைவி சாரான் கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். நம்மில் பலர் செத்துப்போன, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை எண்ணிக் கொண்டிருப்போம்.

ஆபிரகாம் ஒருவனாய் இருக்கையில் அவனை அழைத்து பெருகப்பண்ணின தேவன் எங்களை ஒரு குடும்பமாக குஜராத்தில் பீல் மக்கள் மத்தியில் அனுப்பினார். 22 வருடங்களில் 500–க்கும் அதிகமான சுதேச ஊழியர்களையும், 600–கும் அதிகமான சபைகளையும் தந்து பல்லாயிரம் குடும்பங்களை இரட்சித்துள்ளார். பழைய சைக்கிளில் பல கிலோ மீட்டர் தூரம் சென்று ஊழியம் செய்த நாட்களை நினைக்கிறேன். உண்மையாக ஊழியம் செய்த எங்களுக்கு தற்போது நல்ல வாகனங்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மேலும் இன்று சுமார் 100 சுதேச ஊழியர்களுக்கு மேலாக மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கு கிருபை தந்தார். பேய் பங்களாவில் சந்தோஷமாக ஊழியம் செய்து வந்த எங்களுக்கு இன்று நான்கு அழகான பங்களாக்களை மிஷன் ஊழியத்திற்கு வாங்க கிருபை தந்தார். மாத்திரமல்ல மரத்தடியில், குடிசையில் ஆராதனை செய்துக்கொண்டிருந்த கிராம சபை ஆராதனைகளுக்கு 215 இடங்களில் ஆலயங்களை கட்டி முடிக்க கிருபை தந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக 1 குடும்பமாக சென்று 1.7.1991 –ல் ஊழியம் ஆரம்பித்தபோது 2 குடும்பங்கள் ஜெபிக்க வந்தார்கள். இன்று இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்களைத் தந்து ஷாலோம் திருமண்டலமாக உருவாகும் அளவுக்கு பெருகப் பண்ணிண தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

இதுமட்டுமல்ல முழு பீல் மக்கள் இரட்சிக்கப்படவும் 7000 கிராமங்களில் 7000 சபைகளையும், ஊழியர்களையும் 2020ம் ஆண்டிற்குள் தேவன் தந்து ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம். எனக்கன்பானவர்களே, ஷாலோம் ஊழியங்களுக்காக, எங்கள் குடும்பத்திற்காக, பீல் மக்களுக்காக நீங்கள் ஏறெடுக்கும் ஜெபம், தியாகமான ஆதரவு மற்றும் உங்கள் அன்புக்காக தேவனை துதிக்கிறேன். “தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்” என்று அருள் நாதர் இயேசுவின் வார்த்தையின்படி உங்கள் ஒவ்வொரு குடும்பங்களையும், நீங்கள் செய்யும் வேலைகள், தொழில் மற்றும் ஊழியங்களிலும் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை கட்டளையிடுவாராக.

***தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.***

# மாதத்தில் ஒரு நாள்
# ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

வளர்ந்து வரும் ஷாலோம் மிஷனெரிப் பணிகளுக்காக, ஊழியர்களுக்காக, சபை வளர்ச்சிக்காக, முன்னேற்றப் பணித் திட்டங்களுக்காக தேவையான நிதி உதவிகளுக்காக, குறிப்பாக, 1 கோடிக்கும் அதிகமாக உள்ள அனைத்து பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும் இந்த பரம தரிசனப் பணியை ஏற்று நடத்துகின்ற அன்பு **சகோ. பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்திற்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

தேவ கிருபையால், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படியும், கடந்த செயற்குழு கூட்டத்தில், **Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்களின்** ஆலோசனையின்படியும் **ஒவ்வொரு மாதமும் 3வது சனிக்கிழமை** அதிகாலை 12 மணி முதல் இரவு 12 மணி வரை 24 மணி நேரம் தொடர் சங்கிலி ஜெபம் ஒழுங்கு செய்யப்பட்டு மிக நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. இந்த சங்கிலி தொடர் ஜெபத்தில் இணைந்து 1 மணி நேரம் ஜெபிக்கும் படியாக, **57 பேர்கள்** தங்கள் பெயர்களை கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு தவறாமல் ஜெபக் குறிப்புகளை அனுப்பி வைத்திருக்கிறோம். ஜெப வீரர்கள் தங்கள் இடத்திலிருந்தே ஜெபித்து வருகிறார்கள்.

**21.07.2012 சனிக்கிழமை அதிகாலை 12.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை 24 மணிநேர சங்கிலி தொடர் ஜெபம் நடைபெற உள்ளது.** நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்

**"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." (கலாத்தியர் 6:2)**

---

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

## Yôd Ï jRjR BºoYôRd áÓûL

நாள் : **02.07.2012 (திங்கள் கிழமை)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்**

பாளையங்கோட்டை

பள்ளி SCHOOL HISTORY வரலாறு

# மர்காஷிஸ் மேல்நிலைப் பள்ளி, நாசரேத்

தமிழ் நாட்டின் தென் பகுதியில் தூத்துக்குடி மாவட்டத்தில் நாசரேத் என்ற ஒரு புகழ் பெற்ற நகரம் உள்ளது. ஆலயத்தோடு சேர்ந்த கோபுரம், ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள், பெண்கள் ஆசிரியர் பயிற்சி பள்ளி, பரி. லூக்கா மருத்துவமனை, ஜெயராஜ் அன்னபாக்கியம் பாலிடெக்னிக் மேலும் பொறியியல் கல்லூரி, சமுதாயக் கல்லூரி, தொழில் கல்விக் கூடம், வங்கிகள், அஞ்சல் நிலையம், பேருந்து நிலையம், ரயில் நிலையம், வாரந்தோறும் கூடும் சந்தை மேலும் பலவசதிகள் கொண்ட நகரம் நாசரேத் ஆகும்.

இது கிறிஸ்தவ மக்கள் வசிக்கும் இடமாக 1803–ல் அருள்திரு ஏரியான் என்ற நற்செய்திப் பணியாளர் கண்டு கொண்டார். நாசரேத் எத்தனையோ வசதிகள் பெற்றிருந்த போதிலும் 200 ஆண்டுகளுக்கு மேல் கல்வி சேவை புரிந்து வரும் கல்வி நிலையங்கள் சிறப்பு வாய்ந்தது ஆகும். அதுவும் மர்காஷிஸ் மேல் நிலைப் பள்ளியின் சரித்திரம் நம் அனைவரையும் வியக்க வைப்பதாகும்.

1839–ல் ஆரம்பப்பள்ளி ஒன்று இருபாலருக்கும் என ஏற்படுத்தப்பட்டது. 1876–ல் கனம் மர்காஷிஸ் அவர்கள் நாசரேத் வந்தபோது சாண்பந்து என்ற பெயருடன் சிறிய கிறிஸ்தவ கிராமமாக இருந்தது. ஊருக்கு தென் பக்கத்தில் தேவாலயமும், தேவாலயத்திற்கு வடக்கே, கிழக்கு, மேற்காக 4 தெருக்களும், வடகிழக்கு மூலையில் மருத்துவ மனையும் இருந்தது. ஆலயத்திற்கு தெற்கே மிஷனெரி பங்களாவும் அந்த வளாகத்தின் வடக்கு மூலையில் பெண்கள் பள்ளியும், பங்களாவுக்கு முன்னால் ஆண்கள் பள்ளிக்கூடமும் மேலும் தெற்கே சந்தையும் இருந்தது. கிராமத்தைச் சுற்றி உடைமரமும், பனை மரமும் நிறைந்த தேரியாக இருந்தது.

1880–ல் அது நடுநிலைப் பள்ளியாக உயர்ந்தது. 1887–ல் அருள்திரு. கனோன் ஆர்தர் மர்காஷிஸ் அவர்களால் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது. ஆனால் 1809–ல் இப்பள்ளியின் உயர்நிலை வகுப்புகள் தூத்துக்குடியில் உள்ள கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியுடன் இணைக்கப்பட்டதால் இப்பள்ளி மீண்டும் நடுநிலைப் பள்ளியாக மாறியது. 1909–ம் ஆண்டில் இப்பள்ளிக்கு நடுநிலைப் பள்ளியாக நிரந்தர அரசு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. 1912 வரை இப்பள்ளி நாசரேத் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் மாதிரிப் பள்ளியாக விளங்கியது. 1935–ல் மீண்டும் உயர்நிலைப் பள்ளி என்ற உயர்வைப் பெற்றது. இங்கு அநேகர் தலைமையாசிரியர்



பொறுப்பேற்று சீரிய முறையில் பள்ளியை வளர்த்தனர். அதன் வட்டாரத்தில் சுமார் 20 மைல் சுற்றளவில் இப்படிப்பட்ட பள்ளி இருந்ததில்லை. இப்பள்ளியை மிகச் சிறந்த நிலைக்கு உயர்த்தியவர் திரு. S.A. தாமஸ் தலைமை ஆசிரியர் ஆவார். இவர் 18 ஆண்டுகள் தொடர்ந்து இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

இவர் காலத்தில் அநேக கட்டங்கள் கட்டப்பட்டு புதுப் பொலிவு பெற்றது இப்பள்ளி. இவர் ஒரு தடவை ஜீப் ஓட்டுநராகிய தனது நண்பருடன் சென்னை பட்டணம் வரை ஜீப்பிலேயே பிரயாணம் செய்து, அங்கு வசிக்கும் நாசரேத்தைச் சேர்ந்த பழைய மாணவர்களை அணுகி பள்ளிக் கட்டத்திற்கு நன்கொடை பெற்று வந்தார். இவர் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு வசூல் செய்வதில் ஓர் வசூல் சக்கரவர்த்தி என்றே சொல்லலாம். இவர் வேட்டி கட்டிக் கொண்டு மேலே கோட்டு போட்டுக் கொண்டு வருவார். அவரது தோற்றம் எவரையும் வசீகரிக்கக் கூடியது. அவர் காலத்திலேயே ஒரு மாதிரி விடுதி ஒன்றைக் கட்டி முடித்தார். இந்த மாணவர் விடுதியில் ஒவ்வொரு மாணவனுக்கும் தனியாக படுக்கை, நவீன கழிப்பறை, மேலும் மின் விசிறிகள் போன்ற வசதிகளுடன் கூடிய அறைகள் அமைந்திருந்தன. இவர் காலத்தில் பள்ளியில் மேலும் சிறப்பு என்னவென்றால் பள்ளி இசைக்குழு (School Band) அமைத்து பள்ளி விழாக்களில் அனைவரும் வியக்கும் வண்ணமாக சிறப்பாக நடத்தினார். மேலும் ஆசிரியர் இஸ்ரவேல் அவர்கள் தலைமையில் ஒரு பாடகர் குழு அமைக்கப்பட்டது. இவரது காலத்தில்தான் நாசரேத் இசைக் குழு முக்கியத்துவம் பெற்று, சிறப்பாக விளங்கியது. இஸ்ரேவேல் ஆசிரியரின் தணியாத உழைப்பால் ஆலயத்திலும், பள்ளியிலும் சிறந்த பாடகர் குழு அமைந்தது. அவர்களிடத்தில் பயிற்சி பெற்றவர்கள் அநேகர் உலகம் எங்கும் சென்று ஆங்காங்கே ஆலயத்தில் ஆர்கனிஸ்ட் ஆகவும் பாடகர் குழு தலைவராகவும் இருந்து நாசரேத்தின் புகழைப் பரப்பி வருகின்றனர்.

1987–ல் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்வு பெற்றது. இவ்வாறு பலரும் தியாகம் புரிந்து வளர்ந்த இப்பள்ளி தூத்துக்குடி மாவட்டத்திலேயே பழம் பெரும் பள்ளியாக, சீரும் சிறப்புடன் தற்போது 1500 மாணவர்களும் சுமார் 60 ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடன் தலை சிறந்த பள்ளியாகவும் தென் தமிழகத்திற்கு வந்த கனம். ஆர்தர் மகர்காஷிஸ் அவர்களின் பெயரைத் தாங்கி இயேசுவின் நல் நாமத்திற்கு எங்கும் புகழ் பரப்பி வருகிறது.

இந்த சாட்சியினை வாசிக்கும் அன்பு சகோதர சகோதரிகளே, இன்றும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பல நூறு கிராமங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பீல் ஆதிவாசி, விசுவாசிகளின் பிள்ளைகள் கல்வி அறிவு பெற்று ஆசீர்வதிக்கப்பட குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் பல ஆரம்பப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மாணவர் விடுதிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான சிறப்பு நிதி உதவியும் கல்விப் பணியை நிறைவேற்றக்கூடிய ஆசிரியர்களும் தேவை. கர்த்தர் ஏவினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். கிறிஸ்தவ பள்ளி, கல்லூரி ஸ்தாபனங்கள் இதற்காக ஒரு கரம் நீட்ட அன்புடன் அழைக்கிறோம்.

## _ýûX 8-p 28-YÕ §ÚUQ Sôs LôÔm



### பேராயர் தேவதாஸ்
### சகோதரி வஹிதா தேவதாஸ்
### தம்பதியினர்

***..."நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்"... யோசுவா 24:15***

**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

தேவ கிருபையால் 1985ம் ஆண்டு ஜுலை மாதம் 8ம் தேதி பீஹாரில் மிஷனெரியாக பணிபுரிந்த அடிமையையும், ஒரிசாவில் மிஷனெரியாக பணிபுரிந்த வஹிதாவையும் தேவன் இல்லற வாழ்வில் இணைத்தார்.

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தரிசனம் தந்து நடத்தி சென்றார். 1991ம் ஆண்டு ஜுலை முதல் 22 ஆண்டுகள் ஷாலோம் ஊழியப்பாதையிலும் இல்லற வாழ்வில் 27 ஆண்டுகளையும் கடந்து வர கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

* ஊழியப்பாதையில் தேவன் தந்த ஆத்துமாக்கள், மூப்பர்கள், சுதேச ஊழியர்கள், சபை போதகர்கள், தலைவர்களுக்காக, சபைகளுக்காக மற்றும் திருமண்டலத்திற்காக தேவனைத் துதிக்கிறோம்.
* குடும்பத்தில் தேவன் தந்த **டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா** – பிள்ளைகளுக்காக, பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காக, பிள்ளைகளின் அர்பணிப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம்.
* தேவன் தந்த தரிசனப்பணிகளை நிறைவேற்ற தேவன் கொடுத்த ஸ்தாபனங்கள், சபைகள், குடும்பங்கள், உடன் ஊழியர்கள் யாவருக்காகவும் தேவனை துதிக்கிறேன்.
* எங்கள் இருவரின் இல்லற வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் நல்ல சுகம் பெலன் தந்து ஆவிக்குரிய கிருபைகளை தந்து எங்களை உருவாக்கி காத்து நடத்துகிற தேவனை துதிக்கிறோம்.

இந்த நாளிலும் தேவன் தந்த பீல் ஆதிவாசி மக்கள் தரிசனப்பணியை எங்கள் வாழ்நாள் முழுவதும் உண்மையாக தேவன் எதிர்நோக்கும் திட்டப்படி ஊழியம் செய்ய எங்களை அர்பணித்துள்ளோம். எங்களுக்காகவும், தேவன் தந்த தரிசனப்பணிக்காகவும் அனுதினமும் ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

# பீல் ஆதிவாசி சிறுவர்களை முன்னேற்றுவிக்கும் கல்விப் பணி

**பீல் ஆதிவாசி சிறுவர்கள்**

நமது பீல் ஆதிவாசி சிறுவர்களில் படிப்பறிவு உள்ள சிறுவர்கள் மிக மிக குறைவு. ஏனென்றால் அவர்களது பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் படிப்பினை குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவு. ஆகையால் அவர்களை தங்களுடன் கூலி– வேலைக்கோ, அல்லது வேலை செய்யும்போது மற்ற சிறிய கைக் குழந்தைகளை கவனிப்பதற்கோ சிறுவர்களை தங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவர். சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதைவிட கூலி வேலைக்குச் செல்வதே சிறந்தது என எண்ணுவர்.

**பீல் சிறுவர்களின் கல்வியில் ஷாலோம் ஊழியத்தின் பங்கு**

நமது ஷாலோம் ஊழியத்தின் மூலமாக பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக 1 ஷாலோம் பள்ளி மற்றும் 10 மாணவ மாணவியர் விடுதிகள் உருவாக்கப்பட்டு, கல்விப் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஏறக்குறைய 950 மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர். மேலும் சில பீல் ஆதிவாசி சிறுவர்கள் தற்போது ஆசிரியர், இன்ஜினியர், மருத்துவம் மற்றும் I.T.I. போன்ற துறைகளில் மேற்படிப்பு படித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்விப் பணியில் எதிர்காலத் திட்டங்கள்**

“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” என்பது பழமொழி. இதைக் கருத்தில் கொண்டு நமது ஷாலோம் ஊழியம் செயல்பட்டு வருகிறது. வருங்கால தலைமுறை சிறுவர்களை சிறந்த தலைவர்களாகவும், உயர் பதவி வகிப்பவர்களாகவும் முன்னேற்றுவிப்பது நமது ஷாலோம் ஊழியத்தின் நோக்கமாகும். இதற்காக இனி வரும் நாட்களில் 10 ஆயிரம் சிறுவர்களுக்கு கல்வியறிவு கொடுத்து சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதே நமது திட்டமும், தரிசனமுமாகும்.

**பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கல்வித் தேவைகள்**

பீல் ஆதிவாசி சிறுவர்கள் வருகின்ற 2012 ஜுன் மாதத்தில் புதிய கல்வி ஆண்டில் சேர்க்கப்படவும், அவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள், சீருடைகள், பேனா, பென்சில், புத்தகப் பை போன்ற இதர பொருட்கள் வாங்கிக் கொடுப்பதற்கும் ஒரு குழந்தைக்கு குறைந்தது ரூ. 500/– தேவைப்படுகிறது. மேலும் நாம் தாங்கி வரும் 900 மாணவர்களில் உணவு மற்றும் இதர செலவினங்களுக்காக மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்துத் தாங்கிவரும் குழந்தை ஆதரவாளர்கள் தற்போது 648 பேர் மட்டுமே உள்ளனர். மீதம் உள்ள 252 சிறுவர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும், புதிய கல்வியாண்டிற்கு **4.5 லட்சங்கள்** தேவை இதில் **1.5 லட்சங்கள்** கிடைக்கப் பெற்றுள்ளோம் மீதி தேவைகள் சந்திக்கப்படவும், வருங்காலத் திட்டங்களையும், தரிசனங்களையும் நிறைவேற்ற தேவன் கிருபை தரவும் ஜெபியுங்கள். ஆவியானவர் உங்கள் உள்ளங்களில் ஏவுவாராகில், பீல் பிள்ளைகளின் கல்விப் பணிக்கு உதவ தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

# தூத்துக்குடி மாவட்ட போதகர்கள் கூடுகை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தூத்துக்குடி Bell Hotel Meeting Hall–ல் வைத்து தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அனைத்து பெந்தேகொஸ்தே சபை போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை 22.05.2012 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூடுகையில் ஆரம்ப ஜெபத்தினை **Pr. ரூபன் சாமுவேல்** அவர்கள் ஏறெடுக்க, பாடல் வேளையை **சகோ. ரதீஸ் குமார்** அவர்களும், ஆராதனையை **Pr. சார்லஸ் பூபாலன்** அவர்களும் நடத்தினார்கள். நமது ஷாலோம் **பிஷப் V. தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள்.

**Bp. ஸ்டீபன்** & **Pr. எட்வர்ட் சாம்ராஜ்** ஆகியோர் சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டார்கள். **சகோதரி டாரதி** அவர்கள் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபித்தார்கள். வந்திருந்த அனைத்து போதகர்களையும் ஆசீர்வதித்து **சகோதரி வஹிதா வேதாஸ்** அவர்கள் ஜெபித்து கூடுகையை நிறைவு செய்தார்கள். இந்தக் கூடுகை மூலம் போதகர்களுடன் ஒரு நல்ல ஐக்கியத்தையும், ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், சபையாகத் தாங்கவும் தேவன் கிருபை தந்தமைக்காத் தேவனைத் துதிக்கிறோம்.

---

### *முழு இரவு ஜெபம் – திரவியபுரம் CSI சபை*

**15.06.2012** வெள்ளி அன்று தூத்துக்குடி, திரவியபுரம், CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் நடைபெற்ற முழு இரவு ஜெபத்தினை நமது ஷாலோம் ஊழியர்கள் நடத்த தேவன்கிருபை செய்தார். பாடல் மற்றும் ஆராதனை வேளைகைள **சகோ. ரதீஸ் குமார்** அவர்களும், ஜெபவேளையை **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்களும், நடத்தினார்கள். **சகோ. ஆலன்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

இந்த வாய்ப்பினை வழங்கிய சேகரகுரு **Rev.V.T. பிரின்ஸ் குமார்** அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

---

### *துதி ஆராதனை – புதியம்புத்தூர் தூய யோவான் ஸ்நானகன் ஆலயம்*

**27.05.2012** ஞாயிறு அன்று **புதியம்புத்தூர், தூய யோவான் ஸ்நானகன்** ஆலயத்தில், துதி ஆராதனையை நமது ஷாலோம் ஊழியர்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். இந்தத் துதி ஆராதனையில் பாடல் வேளையை **சகோ. ரதீஸ் குமார்** அவர்கள் நடத்த, ஆராதனையை **சகோ. ஆலன்** அவர்கள் நடத்தினார்கள். ஊழியங்களைக் குறித்து **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் பணித்தளத்திலிருந்து வந்திருந்த **சகோ. கேரட்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். சேகரகுரு **Rev. தேவராஜன்** அவர்களுக்காகவும், சபை உறுப்பினர்களுக்காகவும், இதை ஒழுங்கு செய்த **சகோ. காட்வின்** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## சகோ. டேனியல் கிருபாகரன் (தூத்துக்குடி) குழுவினரின் பணித்தள அனுபவங்கள் (16&17-05.2012)

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! ஆண்டவருடை பெரிதான கிருபையினால் நானும் **(சகோ. டேனியல் கிருபாகரன்)** எனது சகோதரன் **ஃபிராங்ளின் பிரபாகரன்** மற்றும் எனது மூத்த சகோதரனின் மகன் **சகோ. லெஸ்லி ரிச்சர்ட்** ஆக மூவர் கொண்ட குழுவாக நமது ஷாலோம் ஊழிய பணித்தளங்களை பார்வையிட்டு ஊழியங்களை நிறைவேற்றும்படியாக கடந்து சென்றோம்.

**15.06.2012** அன்று இரவு குஜராத் தாகோத்திலுள்ள தலைமை அலுவலகத்தை அடைந்தோம். மறுநாள் **16.06.2012** சனிக்கிழமை அன்று காலை பணித்தள அலுவலக ஊழியர் காலை தியானத்தில் பங்கு பெறவும் அடியேன் தேவ செய்தியளிக்கவும் தேவன் கிருபை பாராட்டினார். அதன்பின் **மத்தியப்பிரதேசத்தில் காளகேத்** என்ற கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள **கிராம ஆலயத்தினை பிரதிஷ்டை செய்து** ஜெபிக்க எனக்கு தேவன் கிருபை செய்தார். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் **சகோ. ஃபிராங்கிளின் பிரபாகரன்,** நாம் ஏன் ஆலயத்திற்கு வர வேண்டும் என்கிற தலைப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. லெஸ்லி ரிச்சர்ட்** அவர்கள் வாழ்த்துச் செய்தியளித்தார்கள். ஆராதனை முடிவில் விசுவாசிகள் ஒவ்வொருவருக்காகவும் தனித்தனியாக தலையில் கை வைத்து ஜெபித்தோம். ஆராதனையின் போது ஜனங்கள் மிகவும் உற்சாகமாக நடனமாடி தேவனை துதித்து, தங்களை அர்ப்பணித்து ஆராதனை செய்தனர். இங்கு எங்களுக்கு பீல் மக்களின் கலாச்சாரத்தின்படி தலைப்பாகை கட்டி, மாலை அணிவித்து உற்சாகமாக வரவேற்றது எங்களை மிகவும் கவர்ந்தது. காளகேத் சபை போதகர் **சகோ. சர்தார் டாமோர்** குடும்பத்தினர் எங்களை மிகவும் உற்சாகமாகவும் அன்புடன் உபசரித்தனர். ஆலயம் நிரம்பி வழியத்தக்கதாக ஏறத்தாழ 300க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அன்று இரவு பணித்தள அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ் ஐக்கிய ஆராதனையில் பங்குபெறவும், **சகோ. ஃபிராங்கிளின் பிரபாகரன்,** ஜெபம் எதற்காக செய்ய வேண்டும் என்ற தலைப்பில் தேவ செய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். தமிழ்நாட்டிலிருந்து தங்களை அர்ப்பணித்து ஆறு குடும்பங்கள் குஜராத்தில் தேவனுடைய பணியை செய்துவருவதைக் கண்டு தேவனைத் துதித்தோம். மேலும் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் எங்கள் ஒவ்வொருவரையும் ஊழியர்களிடம் அறிமுகம் செய்துவைத்தார்கள்.

**17.06.2012** ஞாயிறு அன்று குஜராத், கங்கேலா கிராம ஆலய ஆராதனையில் அடியேன் ஒரு காரியத்தை செவ்வையாய் செய்வதற்கு ஞானமே பிரதானம் (பிர. 10:10) என்ற தலைப்பிலும், குஜராத், போர்கேடா கிராம ஆலய ஆராதனையில் **சகோ. ஃபிராங்கிள் பிரபாகரன்** அவர்கள்

ஆண்டவரை நித்திய ஜீவனுக்காகத் தேடவேண்டும் என்ற தலைப்பிலும் செய்தியளிக்கவும், ஊழியங்களை நிறைவேற்றித் திரும்பவும் தேவன் கிருபை பாராட்டினர். கங்கேலா கிராம ஆராதனையில் ஆலயம் நிரம்பி, ஆலயத்திற்கும் வெளியிலும் மொத்தம் சுமார் 500க்கும் அதிகமான விசுவாசிகள் பங்கு பெற்று தேவனை ஆராதித்தது எங்களை வெகுவாகக் கவர்ந்தது. மேலும் இந்த ஆலய மூப்பர் **சகோ. நகீன்பாய்** தனது சாட்சியின் மூலமாக சுமார் 100க்கும் அதிகமான குடும்பங்களை ஆண்டவரண்டை நடத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இங்குள்ள மூப்பர்களின் விசுவாசத்தையும், அவர்கள் தேவனுக்காக செயல்படும் வேகத்தையும் கண்டோம்.

மேலும் அந்த பீல் ஆதிவாசி ஜனங்கள் தேவனை ஆராதிக்கவும், தேவ செய்தியைக் கேட்கவும் காட்டும் ஆர்வத்தையும், தாகத்தையும் பார்த்த போது நாங்கள் மிகவும் பரவசமடைந்தோம். ஆராதனைகளில் ஜனங்கள் பாடல் புத்தகங்கள் இல்லாமல் பாராமல் கிட்டத்தட்ட 15 பாடல்களுக்கும் மேல் பாடி தேவனை ஆராதிப்பது எங்களை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. பிஷப் தேவதாஸ் அவர்கள் ஜனங்களுக்காக ஜெபித்த போது அநேகர் பிசாசின் பிடியிலிருந்தும், நோயிலிருந்தும் விடுதலை பெற்றனர். மேலும் பாம்பினால் தீண்டப்பட்ட விசவாசி ஒருவருக்காக சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தெலை பேசியில் ஜெபித்தபோது ஜெபத்தின் முடிவில் தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்ததைக் காண முடிந்தது.

பணித்தளங்களில் கிராம ஆலயங்களுக்குச் செல்லும் போதும் திரும்பும் போதும் வழியில் அநேக ஆலயங்களைக் காண முடிந்தது. ஊழியம் என்பது ஒரு கடினமாக காரியம். அதை அர்ப்பணிப்போடும், வைராக்கியத்தோடும் 22 ஆண்டுகள் போராடி **பிஷப் தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ்** அகிய இருவரும் இணைந்து தனி ஒரு குடும்பமாக கர்த்தருக்கென்று ஆயிரமாயிரம் ஆத்துமாக்களையும், நூற்றுக் கணக்கில் சபைகளையும் எழுப்பியுள்ளதைக் காணும் போது தேவனைத் துதிக்கிறோம்.

மேலும் இந்த ஜனங்களின் வாழ்க்கை தரத்தை சுவிசேஷம் முழுவதுமாக மாற்றியிருக்கிறது. இவர்கள் இயேசு கிறிஸ்துவை வைராக்கியமாகப் பிடித்திருக்கிறார், இவர்கள் பிள்ளைகள் படித்து முன்னேறி தேசத்தை ஆளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் தேவன் எங்களைப் பாரப்படுத்துகிறார்.

இதனை வாசித்துக் கொண்டிருக்கிற தேவ ஜனமே, பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் செயல்பட்டுவரும் இந்த அறுவடைப் பணியை தங்களது ஜெபங்களினாலும், பொருளுதவிகளாலும் தாங்க அன்பாய் கேட்கிறேன். மேலும் தற்போது இந்த ஊழியத்தின் அவசரத் தேவைான, மாதம் ரூ. 500/– கொடுத்துத் தாங்கக் கூடிய ஷாலோம் பங்காளர்கள் தேவை. இதற்காக ஜெபிக்கவும், கர்த்தர் ஏவினால் தாங்க முன்வரவும் அன்பாய் கேட்கிறேன்.

**சகோ. டேனியல் கிருபாகரன்** & குழுவினர். தூத்துக்குடி

## முழு இரவு ஜெபம், சிவகாசி - 18.05.2012

சிவகாசியில் வானத்தின் வாசல் ஜெப வீட்டில் வைத்து, கடந்த **18.05.2012** அன்று நடைபெற்ற முழு இரவு ஜெபத்தில் நமது பிஷப் **தேவதாஸ்** அவர்கள் **"அப்போஸ்தலர் நடபடிகளில் ஜெபம்"** என்ற தலைப்பில் சிறப்புச் செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார். கலந்து கொண்ட ஒவ்வொருவர் மீதும் தேவன் ஜெப ஆவியையும், ஆத்தும பாரத்தினையும் விசேஷித்த அபிஷேகத்தையும் ஊற்றினார். இந்தக் கூடுகையை ஒழுங்கு செய்த சிவகாசி முழு இரவு ஜெப ஐக்கியத்திற்காகவும், **சகோ. வாசு** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## மிஷனெரி தரிசனக் கூடுகை, சிவகாசி - 19&20-05-2012

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், சிவகாசி பட்டணத்தில், வானத்தின் வாசல் ஜெபவீட்டில் வைத்து **19 & 20–05–2012** ஆகிய இரு தினங்களும் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூடுகையை CSI ராக்லாண்ட் சபை சேகர குரு **Rev. அமிர்த நாயகம்** அவர்கள் தலைமை தாங்க, ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ் குமார்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனையை நடத்தினார்கள். **சகோ. ராஜமாணிக்கம்** அவர்கள் இசையமைத்தார்கள்.

நமது ஷாலோம் **பிஷப் V. தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு, முதல் நாள் கூடுகையில் **"ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்"** என்ற தலைப்பிலும், அடுத்த நாள் **"அப்போஸ்தலர் நடபடிகளில் மிஷனெரிப் பணி"** என்ற தலைப்பிலும் வாக்குத்தத்த செய்தியளித்தார்கள். கூடுகைகளில் அநேக தேவ ஜனங்கள் கலந்து கொண்டனர், செய்திவேளையில் தேவ பிரசன்னம் இறங்கி வந்தது, அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இரண்டாவது நாள் கூடுகையில், **Pr. நெப்போலியன்** (ஏலீம் அசம்பிளி சபை) அவர்கள் மூலமாக நமது ஷாலோம் ஊழியர் **சகோ. பிரகாஷ் K. கராசியா** (ஹமீர்புரா, இராஜஸ்தான்) அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். **சகோ. ஜாண் வேலுச்சாமி** (திருத்தங்கல்) அவர்கள் குடும்பத்தினர் இந்த ஊழியரைத் தாங்குகிறார்கள்.

**20.05.2012** ஞாயிறு அன்று சிவகாசியில் உள்ள, CSI ராக்லண்ட் ஆலயத்தில் இரண்டு ஆராதனைகளிலும் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் செய்தியளிக்கவும், வாலிபர்கள் கூடுகையில் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் செய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். சபைகுரு **Rev. அமிர்தநாயகம்** அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**20.05.2012** ஞாயிறு அன்று சிவகாசியில் உள்ள, ஏலிம் அசம்பிளி சபையில் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார். சபை போதகர் **Pr. நெப்போலியன்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## முழு இரவு ஜெபம் (18.05.2012) & மிஷனெரி தரிசனக் கூடுகை, சிவகாசி - 19&20-05-2012


செய்திவேளை : பிஷப் தேவதாஸ் அவர்கள்


சிறப்பு ஜெபம் : Pr. நெப்போலியன் அவர்கள்


சுதேச ஊழியர் பிரகாஷ் கராசியா அவர்கள் பிரதிஷ்டை செய்யப்படுகிறார்கள்


கூடியிருந்த தேவ ஜனங்களில் ஒரு பகுதி

## தூத்துக்குடி மாவட்ட போதகர்கள் கூடுகை - 22.05.2012


பிஷப் தேவதாஸ் அவர்களை வரவேற்கும் Pr. ஜஸ்டஸ் அவர்கள்


சிறப்பு செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



சிறப்பு ஜெபம் : சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


கலந்து கொண்ட போதகர் குடும்பங்கள்

# SHALOM CHILDREN BIBLE CLASS (CBC) - 2012



ஆலயத்தின் முன்பு CBC சிறுவர்கள்



அபிநயப் பாடல்கள் பாடும் சிறுவர்கள்





இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட சிறுவர்கள் சாட்சி அறிவிக்கிறார்கள்

# SHALOM COMPASSION PROJECT CBC - 2012



CBC பயிற்சி புத்தகங்களுடன் சிறுவர்கள்



CBC வகுப்புகள்



உற்சாகமாய் பாடல் பவனி செல்லும் CBC சிறுவர்கள்



குறு நாடகங்கள்

# சகோ. டேனியல் கிருபாகரன் & குழுவினரின் பணித்தள வருகை




ம.பி. காளகேத் கிராம ஆலயத்தினை பிரதிஷ்டை செய்யும் சகோ. டேனியல் கிருபாகரன் அவர்கள்



கலாச்சார வரவேற்பு



கூடியிருந்த சபை விசுவாசிகள்



சிறப்புச் செய்தி சகோ. ஃபிராங்கிளின் பிரபாகரன்



வாழ்த்துச் செய்தி : சகோ. லெஸ்லி ரிச்சர்ட்




குஜராத், கங்கேலா கிராம ஆலய ஞாயிறு ஆராதனையில் செய்தி மற்றும் ஜெப வேளையில்

## ஷாலோம் அலுவலக & முன்னேற்றப்பணி ஊழியர் குடும்ப கூடுகை - 29.05.2012


ஊழியர்களுக்கு ஆலோசனை – பிஷப் தேவதாஸ்


தலைமை அலுவலக மற்றும் முன்னேற்றப்பணி ஊழியர்கள்

## இயேசு விடுவிக்கிறார் - வாலிபர் கூடுகை, நாகர்கோவில் (17.06.2012)


செய்தியாளர் : சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்


கூடியிருந்த வாலிபர்கள்

## டைட்டஸ் - மெர்லின் திருமண நிச்சயதார்த்தம் - 30.05.2012







தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி, பிஷப் தேவதாஸ் அவர்களின் மூத்த மகன் சகோ. டைட்டஸ் –க்கும் சகோதரி மெர்லினுக்கும் திருமண நிச்சயதார்த்தம் கடந்த 30.05.2012 அன்று சிறப்பாக நடைபெற்றது. தேவ சித்தத்தின்படி அவர்களின் திருமணம் வருகின்ற ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி (06.08.2012) தூத்துக்குடியில் நடைபெறவுள்ளது.

தேவன் மணமக்களை ஆசீர்வதிக்கவும், திருமண ஒழுங்குகள் சிறப்பாக நடைபெறவும், தேவைகள் சந்திக்கப்படவும், மறவாமல் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் திருமணத்திற்கு தாங்கள் யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**தேவனாகிய கர்த்தர் : மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். ஆதி. 2:18**

## இயேசு விடுவிக்கிறார் - வாலிபர் கூடுகை, நாகர்கோவில்

நாகர்கோவில் ஏதேன் கார்டனில் ஒவ்வொரு மாதமும் இயேசு விடுவிக்கிறார் மூலமாக வாலிபர்களுக்கென்று சிறப்பு கூடுகை நடைபெற்று வருகிறது. இந்தக் கூடுகையில் **17.05.2012** அன்று நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியளிக்கவும், மார்த்தாண்டம், **சகோ. ஜார்ஜ்** மற்றும் அவர்கள் ஊழியங்களைக் குறித்து அறிமுகம் செய்தார்கள்.

இந்தக் கூட்டத்தினை ஒழுங்கு செய்த **சகோ. செல்வதுரை** அவர்களுக்காவும் நாகர்கோவில் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் **சகோ. ஜெயக்குமார்** அவர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

---

## ஷாலோம் அலுவலக ஊழியர் & முன்னேற்றப் பணியாளர்கள் குடும்ப கூடுகை - 29.05.2012

தேவனுடைய பெரிதான கிருபையினால், கடந்த **29.05.2012** அன்று தூத்துக்குடி, Bell Hotel Meeting Hall –ல் வைத்து, தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் முன்னேற்றப் பணியாளர்கள் ஆகியோருக்கான சிறப்பு குடும்ப முகாம் நடைபெற்றது.

முகாமின் ஆரம்பமாக **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் ஜெபம் செய்தர்கள். பாடல் மற்றும் ஆராதனையை **சகோ. ஒநேசி** அவர்கள் நடத்தினார்கள். **பிஷப் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோர் ஊழியர்களுக்கு சிறப்பு ஆலோசனைகளை வழங்கினார்கள். **சகோ. அகஸ்டின் ராஜ சேகர்** (முதலூர்) அவர்கள் சிறப்புச் செய்தியை வழங்கி ஊழியர் குடும்பங்களுக்காக ஜெபித்து ஆசீர்வதித்தார். மேலும் சிறப்பு வேதாகம கேள்வி பதில் நிகழ்ச்சியை **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் நடத்தி ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

---

## அறிமுகப்படுத்துகிறோம்...



நமது ஷாலோம் ஊழியத்தில், நாகர்கோவில் பகுதியில் முன்னேற்றப்பணி செய்யும்படியாக **சகோ. S.P. ஜெயக்குமார்** அவர்கள் குடும்பமாய் அர்ப்பணித்து கடந்த **01.05.2012** முதல் முழு நேரப் பணியாளராக செயல்பட்டு வருகிறார்கள் என்பதை, நாகர்கோவில் பகுதி ஆதரவாளர்களுக்கு தெரிவிக்கிறோம்.

**சகோ. S.P. ஜெயக்குமார்** அவர்கள் தங்களை நாடி வரும்போது ஆதரவாளர்கள் அவர்களை அன்போடு ஏற்று, ஷாலோம் ஊழியங்களுக்கான தங்கள் காணிக்கைகளை அவர்களிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக்கொள்ள அன்பாய்க் கேட்கிறோம். **சகோ.S.P. ஜெயக்குமார்** அவர்களுக்காகவும், அவரது குடும்பம் மற்றும் பிள்ளைகளுக்காவும் தொடர்ந்து ஜெபிக்க அன்பாகக் கேட்கிறோம். தொடர்புக்கு : **9487421159** (செல்)

# SHALOM CHILDREN BIBLE CLASS (CBC) - 2012

தேவனுடைய பெரிதான கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபத்தினாலும், இந்த வருடம் மே மாதத்தில் 10–ம் தேதியிலிருந்து 20–ம் தேதி வரை ஷாலோம் திருச்சபைகள் அனைத்திலும் Children Bible Class (CBC) மிகவும் சிறப்பாய் நினைப்பதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கும் அதிகமாகவே தேவன் ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். ஜெபித்த உங்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறோம்.

இந்த வருடத்தில் "எனது அழகான இருதயம்" என்ற தலைப்பில் CBC நடைபெற்றது. 30,000 புத்தகங்கள் குஜராத்தியிலும், ஹிந்தியிலும் அச்சடிக்கப்பட்டது. இந்த ஆதிவாசி சிறுவர்கள் கிறிஸ்துவுக்குள் நடத்தப்பட்டார்கள். ஒவ்வொரு பிள்ளைகளுடைய இருதயமும் இயேசு தங்கும் அழகான இருதயமாய் மாற்றப்பட்டுள்ளது. பிள்ளைகள் மனப்பாட வசனங்கள், கதைகள், பாடல்கள், action songs, நடனங்கள், நாடகங்கள் அனைத்தையும் கற்றுக் கொண்டு, பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்ற வசனத்தின்படி நவமான இருதயத்தை பெற்றுக் கொண்டார்கள். 20–5–12 ஞாயிறு அன்று எல்லா சபைகளிலும் CBC Sunday என்று மிகவும் சிறப்பாய் கொண்டாடப்பட்டது. அந்த Sunday church- ல் முழு ஆராதனையையும் போதகர் தலைமையில் பிள்ளைகளை பொறுப்பாய் நடத்தும்படியாக பயிற்சி கொடுக்கப்பட்டு, அதன்படி நடத்தப்பட்டதை பார்த்து பெற்றோர்கள், விசுவாசிகள் மனம் மகிழ்ந்தார்கள். ஆராதனையில் பாடல், வசனம் வாசிப்பது, மனப்பாடம் வசனம் கூறுவது, சாட்சிகள், 10 விதமான இருதயங்களை குறித்ததான செய்தியை பிள்ளைகளே முன்னாக நின்று பிரசங்கித்தார்கள். எல்லா மக்களும் மிகவும் ஆவியில் உற்சாகம் அடைந்தார்கள்.

குறிப்பாக மத்தியபிரதேசம் ஹசல்வட் சபையில் 109 பிள்ளைகள் (வீடுகள் மிகவும் தூரமாக இருந்ததால்) 10 நாட்களும் ஆலயத்தில் தங்கி CBC பாடங்களை படித்தார்கள். இவர்களுக்கு தங்கும் இடம், வசதி, சாப்பாடு மூன்று வேளையும் கொடுத்து வசனம் போதிக்கப்பட்டது. 10 நாட்களும் பிள்ளைகள் மிக உற்சாகமாய் பங்கு பெற்றார்கள். மற்றும் இயேசுவை அறியாத பிள்ளைகளும் கலந்துகொண்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். மற்றும் கலந்து கொண்ட பிள்ளைகள் பாவத்திலிருந்து விடுதலை பெற்றார்கள். பீடி, தம்பாக்குக்கு அடிமையான பிள்ளைகள் விடுதலை பெற்றார்கள். பொய் பேசுவது, திருடுவது, சண்டைபோடுவது, பிறனுடைய பொருளை இச்சிப்பது இப்படிப்பட்ட பொல்லாத குணங்கள் மாறி விடுதலை அடைந்து சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள். தேவனுக்கே மகிமை.

நமது Compassion Project மூன்று Hirola, Jeri (Guj) Anthervelia (MP) இடத்திலும் CBC மிகவும் சிறப்பாய் நடத்தப்பட்டது. ஹிரோலாவில் 250 பிள்ளைகளும், இந்த வருடம் ஜெரியில் அதிக எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஜெரியில் 215 பிள்ளைகளும், அந்தர்வேலியாவில் 404 பிள்ளைகளும், பங்கு பெற்றார்கள். இருதயம் எப்படிப்பட்டது? நம் இருதயம் எப்படி இருக்க வேண்டும்? என்பதை மிகவும் நேர்த்தியாய் அறிந்து கொண்டார்கள். இதில் இயேசுவை அறியாத 125 பிள்ளைகள் மிகுந்த ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். ஒழுங்காக பங்கு பெற்ற பிள்ளைகள்

அனைவருக்கும் பரிசு வழங்கப்பட்டது. ஜெரி கிராம ஆலயத்தில் CBC Sunday அன்று யோவான் சாம்ஜி மெய்டா என்ற சிறுவன் பொறுப்போடு ஆலய ஆராதனை மிகவும் சிறப்பாய் நடத்தினார். இப்படிப்பட்ட வளர்ச்சியையும், திறமையையும் கண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். கடைசி நாளில் உற்சாகமான பாடல்களை பாடி, நடனம் ஆடி கொண்டே ஆலய வளாகத்தைச் சுற்றி ஊர்வலம் வந்தார்கள். இதைப் பார்த்த மற்ற இயேசுவை அறியாத பிள்ளைகளின் பெற்றோர்களும் வந்து இந்த விழாவில் பங்குபெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்று சென்றார்கள்.

ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தங்கள் இருயம் மாறினதை குறித்தும், தாங்கள் பெற்ற இரட்சிப்பைக் குறித்தும் சாட்சிகள் பகிர்ந்தார்கள். அவற்றில் சிலவற்றை பார்ப்போம் :

**சிலாஸ் சாம்ஜி (13 வயது) ஜெரி – மாநிலம் : குஜராத்**

இவன் விமல் என்று சொல்லக்கூடிய தம்பாக்கு பாக்கெட் தினமும் சாப்பிடுவது வழக்கமாயிருந்தது. ஆனால் CBC –ல் பங்கு பெற்று தன் இருதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான். தம்பாக்கு சாப்பிடுவதிலிருந்து தேவன் இவனுக்கு விடுதலை கொடுத்தார்.

**சாரா ஜாமு (வயது 12) ஜெரி – மாநிலம் : குஜராத்**

இந்த மகள் எப்பொழுதும் கெட்ட வார்த்தை பேசும் வழக்கம் இருந்தது. ஆனால் இது பாவம் என்று தெரியாதவளாய் இருந்தாள். CBC ல் வந்து கெட்ட வார்த்தை பாவம் என்று அறிந்து, பாவ மன்னிப்பு கேட்டு, ஜெபித்தாள். தேவன் இவளுக்கு விடுதலை கொடுத்தார். இப்பொழுது அப்படி பேசுவதை விட்டு விட்டு சாட்சியாய் இருக்கிறாள்.

**பிரகாஷ் மெய்டா (வயது 14) ஜெரி – மாநிலம் : குஜராத்**

பலவிதமான தம்பாக்கு போன்ற பொருட்களை சாப்பிடும் பழக்கம் இருந்தது. இதற்கு அதிக செலவு செய்து விடுவான். CBC–ன் மூலம் இது பாவம் என்று அறிந்து, அறிக்கை செய்து, பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்று புது மனிதனாய் மாறினான்.

**ராஜேஷ் ஆஜ்னார் (வயது 10) புராடியா – மாநிலம் : MP**

இவன் படிப்பு அறிவு இல்லாதவன். பள்ளிக்கு போனதில்லை. இயேசுவை அறியாத மகன். இந்த 10 நாட்கள் CBC Class ல் ஒழுங்காக பங்கெடுத்து, தன் இருதயத்தை ஆண்டவருக்கு ஒப்பு கொடுத்தான். இவன் உள்ளத்தில் சந்தோஷத்தை பெற்றான். மட்டுமல்லாமல் ஒரு விசேஷ கிருபை இறங்கி, எழுத படிக்கும் திறமையையும் பெற்றான். CBC புத்தகங்களை தானாகவே வாசிக்கும் ஞானம், அறிவை பெற்றுக்கொண்டான். இந்த சிறுவன் இனிமேல் பள்ளி சென்று படிப்பேன் என்று சாட்சி பகிர்ந்தான்.

**தினேஷ் குரு (வயது 12) ஹசல்வட் – மாநிலம் : MP**

இந்த சிறுவன் சாராயம் குடிப்பவன். இயேசுவை பற்றி அறியாத குடும்பத்தை சேர்ந்தவன். இவன் 10 நாட்கள் CBC யில் கலந்து இருதயத்தை பற்றி படித்து தன் இருதயத்தை சுத்தமாய் வைத்துக் கொள்வேன் என்று கூறி சாராயத்தை விட்டுவிட்டு மனந்திரும்பினான். வசனங்களை, பாடல்களை கற்றுக்கொண்டான். கடைசியில் முடிந்து வீட்டிற்கு சென்று, பெற்றோர்களுக்கு இயேசுவை பற்றி கூறினான். அவர்களும் இயேசுவை அறிந்து, ஆலயத்திற்கு வருகிறார்கள்.

**தாவ்லி பேன் (வயது 13) ஹசல்வட் – மாநிலம் : MP**

இந்த சிறுமி 7–ம் வகுப்பு படித்து வருகிறாள். இவளுடைய பெற்றோர் விசுவாசிகள். ஆனால் இவள் இயேசுவை பற்றி அறிந்தும் கூட சில பாவத்தில் இருந்தாள். முக்கியமாக, தம்பாக்கு போன்ற வஸ்துக்களை வாங்கி சாப்பிடுகிறவளாய் இருந்தாள். இந்த CBC வகுப்புகளில் பங்கு பெற்று மனஸ்தாபப்பட்டு அழுது தன் பாவத்திலிருந்துந்து விடுதலை பெற்று, இயேசுவின் பிள்ளையாக மாறினாள்.

**மோகன் (வயது 12)**

இவன் முன்பு ஆலயத்திற்கு வரவே மாட்டான். பெற்றோர் அழைத்தாலும் சாக்குபோக்கு கூறி விடுவான். ஆனால் CBC 10 நாட்கள் கலந்து கொண்டு இருதயத்தை பற்றி அறிந்து கொண்டு, தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட ஆரம்பித்தான். மனந்திரும்பினான். 10 நாட்கள் முடிந்த பிறகு வீட்டிற்கு போக மனதே இல்லாமல் அழுது கொண்டே வீட்டிற்கு சென்றான். ஆலயத்திலே இருப்பேன் என்று கூறினான்.

**லெக்ஷ்மிபேன் பாங்கி (வயது13) நகரேலா – மாநிலம் : குஜராத்**

10 நாட்கள் ஒழுங்காக CBC வகுப்பில் படித்து, பாவத்தை குறித்து உணர்வு அடைந்தாள். அழுது ஜெபித்தாள். பாவத்திலிருந்து விடுதலை பெற்று இனிமேல் பாவம் செய்யமாட்டேன் என்று சாட்சி கூறினாள்.

**தீபிகா பேன் (வயது 12) நகரேலா – மாநிலம் : குஜராத்**

இயேசுவை அறியாத குடும்பத்தைச் சேர்ந்தவள். 10 நாட்கள் CBC வகுப்பு வந்து ஆடல், பாடல், வசனம், கதைகள் எல்லாம் படித்தாள். நன்றாக 10 வசனங்களை மனப்பாடம் செய்தாள். இரட்சிப்பு பெற்றாள். மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். ஞாயிறு ஆராதனைக்கு தவறாமல் வருகிறாள்.

**சுனில் கர்வால் (வயது 14) கடோயி – மாநிலம் : குஜராத்**

இந்த வாலிப பருவத்தில் இச்சையில் விழுந்து அவதிப்பட்டான். ஆனால் CBC –ல் 10 நாள் வந்து பங்கு பெற்றதில், இச்சை என்பது பாவம் என்று அறிந்து, இயேசுவிடம் மன்னிப்பு கேட்டு, அதிலிருந்து விடுதலை பெற்றான். உள்ளத்தில் சமாதானம் பெற்று மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறாள்.

**காஜல்பேன் கணாவா (வயது 5) ஹிரோலா – மாநிலம் : குஜராத்**

10 நாட்கள் CBC –ல் கலந்துகொண்டதில் இருதயத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி. நான் **பாவம், இச்சை, களவு, பொய் எதையுமே செய்யமாட்டேன்** என்று சாட்சி கூறினாள்.

**விஜய் வசுனியா (வயது 8) ஹிரோலா – மாநிலம் : குஜராத்**

இயேசுவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவன். CBC–ல் 10 நாட்கள் கலந்துகொண்டதில் பாவ வாழ்க்கை மாறி இரட்சிப்பு கிடைத்தது. வரும் காலத்தில் பாவம் என்னை தேடி வந்தாலும் கூட இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுப்பேன் என்று மகிழ்ச்சியாய் கூறினான்.

**எஸ்தர் கணாவா (வயது 8) ஹிரோலா – மாநிலம் : குஜராத்**

CBC – ல் கலந்துகொண்டதில் பொய், கெட்ட வார்த்தை இரண்டும் என் வாயிலிருந்து இனிமேல் புறப்படுவதில்லை என்று தீர்மானம் எடுத்தாள்.

**கிஞ்சல் புரியா (வயது 7) ஹிரோலா – மாநிலம் : குஜராத்**

இவளுடைய பெற்றோர்கள் இயேசுவை அறிந்த குடும்பமாக இருந்தாலும், இவள் ஒழுங்காக ஆலயத்திற்கு செல்லாமல் இருந்தாள். இனிமேல் தேவாலயம் ஒழுங்காக செல்வேன் என்று தீர்மானம் எடுத்துள்ளாள். விண்ணப்பத்தின் ஆவி இவள் மேல் இறங்கி, இவளுடைய ஜெப வாழ்க்கை மாறியது.

**ரகு டிட்டா (வயது 10) அந்தர்வேலியா – மாநிலம் : MP**

CBC –ல் 10 நாள் பங்கு பெற்று, பாடல், கதை, வசனம் படித்து, மனமாற்றம் அடைந்தான். தான் மட்டுமல்லாமல் மற்ற 5 பிள்ளைகளை அழைத்து வந்தான். வந்த அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். கடைசி நாளில் இந்த சிறுவன் இப்படியாக சாட்சி கொடுத்தான். அடுத்த வருடம் இன்னும் அதிகமான பிள்ளைகளை அழைத்து வருவேன் என்றான்.

**தீபக் பர்மார் (வயது 12) அந்தர்வேலியா – மாநிலம் : MP**

மிகவும் உற்சாகமாய் CBC 10 நாட்களில் பங்கு பெற்றான். வசனங்களை, கதைகளை மனப்பாடமாய் படித்தான். கடைசி நாளில் **"என்னுடைய அழகான இருதயம்"** என்ற தலைப்பில் 10 பாடங்களையும் சேர்த்து ஆலயத்தில் அழகாக பிரசங்கம் செய்தான்.

**நவல்புரியா (வயது 12), அணில் பார்மார் (வயது 14) அந்தர்வேலியா – மாநிலம் : MP**

இந்த இரண்டு பேரும் மிகவும் உற்சாகமாய் CBC –ல் பங்கு பெற்று நன்றாக பாடங்களை கற்றார்கள். இவர்கள் இருதயம் மாறினது. வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. இந்த இரண்டு பேரும் கடைசி நாளில் ஆலயத்தில் எழும்பி நின்று சபையார் நடுவில் சாட்சி கூறினார்கள். எங்கள் இருதயம் மாறியுள்ளது. நாங்கள் மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறோம். நீங்களும் உங்கள் இருதயத்தை இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்பீர்கள் என்றால், உங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை அருள்வார். ஆகையால் ஒப்புக்கொடுங்கள் என்று சாட்சி கூறினார்கள்.


ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

**` ôúXôm ETYôNd á Ó û L**


| | |
|---|---|
| நாள் : **07.07.2012 (சனிக்கிழமை)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : சகோ. **S.G. ராஜகுரு**
("கோடிகளுக்கு சுவிசேஷம்" குழுவினர்), இடையன்விளை

மிஷனெரி முன்னோடிகள்

# LôpÓùYp ùTÚUL ] ô0



அறநெறியில் வாழ்ந்து செயற்கரிய பணிகள் பல செய்து சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் தொண்டுகள் பல செய்து இன்றைக்கும் நம் நினைவில் வாழும் பேராயர் கால்டுவெல் 1814ஆம் ஆண்டு மே மாதம் 7ம் தேதி அயர்லாந்தில் அன்றிம் என்ற ஊரில் பிறந்தார்.

பத்தாவது வயதில் தம் தாய் நாடாகிய ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் பெற்றோர்களுடன் சென்று குடியேறினார். தந்தையின் விருப்பப்படி ஓவியம் பயின்று பரிசுகள் பெற்றார். பன்னிரெண்டாவது வயதிலேயே இடயறாது ஆங்கில இலக்கிய இலக்கணங்களை பழுதறக் கற்றுத் தேர்ந்தார். எங்கும் நிறைந்த பரம் பொருளின் பெருமையை கிறிஸ்தவ சமய வாயிலாக பரப்பி தொண்டாற்றுவதே தலைசிறந்த வாழ்க்கைப் பணி என இறையியல் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பல மொழிகள் பயின்றார். மொழி ஆராய்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டினார்.

இந்த கால கட்டத்தில் தான் தமிழ்நாட்டின் தென் பகுதியில் கிறிஸ்தவ சமயப்பணி செய்யத்தக்கதாகத் தொண்டர் ஒருவரை லண்டன் சமயத் தொண்டர் சங்கத்தினர் நாடினர். அந்த நாட்டம் கால்டுவெல் மீது சென்றது. கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய கால்டுவெல்லை அந்த சங்கத்தினர் தேர்ந்தெடுத்து தமிழ்நாட்டிற்கு அனுப்பினர்.

1837–ல் தனது 23வது வயதில் இந்தியாவிற்கு கப்பல் ஏறினார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு 4 மாதம் கப்பல் பயணம். கப்பலில் கால்டுவெல்லோடு பயணம் செய்த சமஸ்கிருத வல்லுனர் பிரவுன் என்பவரிடம் சமஸ்கிருத மொழியை பயணத்தின் போது 4 மாதங்களில் நன்கு கற்றுத் தேறினார். 1838ம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் நாள் சென்னை துறைமுகத்தில் வந்திறங்கினார். சென்னையில் மூன்றரை ஆண்டு காலம் தங்கினார். அங்கு தமிழ் மொழியை நன்கு கற்றார். 1814–ல் (27வது வயதில்) சமயத்துறையில் தேர்ந்து குருப்பட்டம் பெற்றார்.

பின்னர் கால் நடையாகவே சென்னையிலிருந்து சிதம்பரம், மயிலாடுதுறை, தரங்கபம்பாடி ஆகிய இடங்களில் தங்கி அங்குள்ள பேச்சு வழக்குகளை அறிந்து கொண்டு தஞ்சாவூர் வந்தார். அங்கு வேதநாயகம் சாஸ்திரியாரைச் சந்தித்து தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். தொடர்ந்து உதக மண்டலத்தில் தங்கி இளைப்பாறினார். கொங்கு நாட்டுக் கோவையிலிருந்து பாண்டி நாட்டின் மதுரை மாநகர் வந்தார். திருமங்கலத்தில் சமயத் தொண்டு புரிந்த தமிழ் அறிஞரை சந்தித்து அவருடன் பாளையங்கோட்டையில் சில நாட்கள் தங்கி நாசரேத் வந்தார். நாசரேத் மக்களின் விருப்பத்திற்கேற்ப அங்குள்ள ஆலயத்தில் சமய உரையாற்றி, முதலூர் சென்று அங்கும் சமய உரையாற்றி பத்துமைல் தூரம் தேரிக் காட்டின் வழியே பெரும்பாடுபட்டு நடந்து இடையன்குடி வந்து அங்கும் சபையில் உரையாற்றினார்.

1841 டிசம்பர் 11ம் நாள் ஞாயிறன்று இடையன்குடியில், முதன் முதலாக ஆராதனை நடத்தி செய்திக் கொடுத்தார். சுற்றியுள்ள உவரி, குண்டல் போன்ற 13 கிராமங்களில் கால்நடையாகச் சென்று நற்செய்தியை அறிவித்தார். அனைத்து தலங்களுக்கும் கால்டுவெல் அவர்கள் செய்த கால்நடைப் பயணத்தால் தஞ்சையின் நில வளமும், தரங்கம்பாடியின் கடல் வளமும், நீலகிரியின் மலை வளமும், கொங்குநாட்டின் காட்டு வளமும் கால்டுவெல்லின் உள்ளத்தில் நன்கு பதிந்தன.

தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களும், தமிழ் மொழியின் பல வளங்களும் அவருக்கு நன்கு விளங்கின. இந்த அனுபவந்தான் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தையும் திருநெல்வேலியின் வரலாற்றையும் எழுதுவதற்கு பேருதவியாயிருந்தது. தூத்துக்குடியிலும் சில நாள் தங்கி சமயத் தொண்டாற்றினார். அதன் நினைவாகவே தூத்துக்குடியில் கால்டுவெல் மேல் நிலைப் பள்ளியும், தற்போது புதிதாக பேராயர் கால்டுவெல் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1844 மார்ச் 20ஆம் நாள் 29 வயதான கால்டுவெல் குருவானவரின் திருமணம் நடந்தது. மனைவி நாகர்கோவிலில் ஊழியம் செய்த மார்கட் மால்ட் என்ற குருவானவரின் மகள் எலைசா என்பவர் ஆவார். எலைசாவை இடையன்குடிக்குக் கூட்டி வந்தபோது கிராம மக்கள் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தனர். அப்போது இடையன்குடியில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் பனையேறும் தொழிலைக் கொண்ட படிப்பில்லா ஏழைகள். அந்த நேரத்தில் ஒரே ஒரு கிறிஸ்தவ குடும்பம் மட்டுமே இருந்தது. எலைசா அம்மையார் பெண்களுக்கு பூ தையல் வேலைகள் கற்றுக் கொடுத்து விற்பனைக்கு வழி வகுத்து வளமான வாழ்வை உண்டாக்கினார். பனைத் தொழில் செய்வோர் படிப்பிலும், பண்பிலும் பளிச்சென வளர்ந்தனர்.

இடையன்குடியில் முதல் ஆலயம் குடிசையாக இருந்தது. அதை ஐந்து முறை விரிவாக்கம் செய்து இப்போதுள்ள பெரிய ஆலயத்தை 1848 ஆக்டோபரில் கட்ட ஆரம்பித்து 32 வருடங்களில் கட்டி முடித்தார். மக்கள் தங்கள் வியர்வையையும், பதனீரையும் கலந்து கட்டிய தேவாலயந்தான் தூய திரித்துவ ஆலயம்.

1856ல் திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் என்ற அபூர்வமான ஆய்வு நூலை எழுதி முடித்தார். அதன் மூலம் தமிழின் பழமையையும், பெருமையையும் உலகிற்கு உணர்த்தினார். இடையன்குடி வந்த மூன்று ஆண்டுக்குள் இடையன்குடி வட்டாரத்தில் 21 திருச்சபைகளையும் 9 பள்ளிகளையும் நிறுவினார். 31 கிராமங்களில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினார்.

பெண் கல்வி அவசியம் என பெண்களுக்கும் கல்வி கற்றுக் கொடுத்தார். 1875—ல் வேல்ஸ் இளவரசர் திருநெல்வேலி வருகை தந்தபோது கால்டுவெல் குருவானவர் 10,000 கிறிஸ்தவர்களோடு மணியாச்சி புகை வண்டி நிலையத்தில் அவரைச் சந்தித்து வரவேற்றார். இளவரசரின் பாராட்டைப் பெற்றார்.

1877 மார்ச் 11—ல் பேராயராக அபிஷேகம் பெற்றார். அப்போது ஊர் குப்பைக் காடாக இருந்ததினால் தெருக்களையும், வீடுகளையும் முறைப்படுத்தி திருத்தி அமைத்தார். அதே 1877ம் ஆண்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது கால்டுவெல் பேராயர் 96,000 பேர்களுக்கு சாதி, மத பேதமின்றி பஞ்ச நிவாரண உதவி அளித்தார். அதன் மூலம் 35,000 பேர் கிறிஸ்தவ

சமயத்தைத் தழுவினர். ஒரே நேரத்தில் 2000 பேர் வழிபாடு செய்ய வசதியான புதிய ஆலயத்தை முதலூரில் எழுப்பினார். 1848ல் கட்ட ஆரம்பித்த இடையன்குடி ஆலயம் 1880 ஜுலை ஆறாம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2000 கிராம மக்கள் பங்கு பெற்றனர்.

அன்னாரின் சமயப் பணியின் பொன்விழா 1887—ல் கொண்டாடப்பட்டது. 1889—ல் பேராயர் சார் ஜெண்ட் மரணமடைந்தார், ஆதலால் அவர் பொறுப்பில் இருந்த சேகரங்களையும் கால்டுவெல் ஏற்க வேண்டியதாயிருந்தது. அந்த சமயத்தில்தான் தூத்துக்குடி, சாயர்புரம் ஆகிய சபைகளில் அதிகப்படியான கவனம் செலுத்தினார். சபைகள் வளர்ந்து பெருகின. மகாராணி விக்டோரியாவின் பெயரில் விக்டோரியா மகளிர் பள்ளியையும் எலைசா நிறுவினார்.

சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் தொண்டுகள் செயற்கரிய பணிகள் பல செய்த கால்டுவெல் பெருமகனார் 1891ல் ஆகஸ்ட் 28ம் நாள் கொடைக்கானலில் மரித்தார். அவரது உடல் அவருடைய விருப்பப்படி இடையன்குடிக்கு கொண்டு வரப்பட்டு அவரால் கட்டப்பட்ட ஆலயத்தின் பலிபீடம் (Altar) பகுதியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது துணைவியார் எலைசா 1899 ஜுன் 15ல் தூத்துக்குடியில் மரித்துப் போகவே அவருடைய உடல் இடையன்குடி ஆலயத்தில் பலிபீடப் (Altar) பகுதியிலேயே கால்டுவெல் பேராயர் அருகிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

இடையன்குடியில் காணப்படும் தூய திரித்துவ ஆலயமும், கால்டுவெல் நூற்றாண்டு நினைவு மேல்நிலைப் பள்ளியும் (CCMHS) கால்டுவெல் பெருமகனார் பெயரை நமக்கு நினைவுபடுத்தி, என்றென்றும் நம் நினைவில் வாழும் பேராயர் கால்டுவெல் பெருமகனார் என்று நம் உள்ளங்கள் பூரிப்படைகின்றன.

***"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்"***
***ரோமர் 11 : 15***

`ôúXôm ª`ù]¬ ù_Tdá ÓûL

நாள் : **14.07.2012, சனிக்கிழமை**

நேரம்: **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை**

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 600க்கும் அதிகமான ஜெபக்குழுக்களுக்காக, 240க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் மற்றும் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெற்றுவரும் அற்புத உபவாச கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக புதிதாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** அவர்களையும், Media & Communication துறைகளை நிர்வகிக்க பொறுப்பேற்றுள்ள **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் பயன்படுத்த, ஆசீர்வாதமாக உருவாக ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் **சகோதரி ஷெக்கினா** அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 485க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Projcet மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர்வசதிகளுக்காவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் பள்ளிக் கூடங்களுக்கு நல்ல வசதியான கட்டடங்கள் கிடைக்கப் பெறவும், பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறவும், இந்த உலகிற்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 950க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும் சுகம் பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- விடுதி காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காவும், புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்து கல்வி பொருட்களுக்கான தேவைகளை தேவன் சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.
- Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.
- எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**எதிர்காலத் திட்டங்களுக்காக...**

- 3 மாநிலங்களிலும் 3 திருச்சபைகளாக பிரிக்கப்பட்டு தனித்தனியே பேராயர்கள் ஏற்படுத்தப்படவும். சபை ஒழுங்குகள் சரிவர செய்யப்படவும் ஜெபியுங்கள்.
- தேவனுக்கு சித்தமானால், 2015க்குள், 1000 திருச்சபைகள் மற்றும் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- பணித்தள அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் கட்டட விரிவாக்கத்திற்காக ஜெபியுங்கள்.
- ஊழியர்கள் கூட்டங்கள் மற்றும் இதர முகாம்கள் நடத்த வசதியான Meeting Hall கட்டப்பட ஜெபியுங்கள்.
- தேவனுக்குச் சித்தமானால், ஆடியோ, வீடியோ படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் பண்ணக்கூடிய அளவிற்காக சாதனங்கள் வாங்கப்பட்டு வீடியோ ஆடியோ நிலையங்கள் உருவாக்கப்பட தேவையான நிதி உதவி மற்றும் அதற்கேற்ற ஊழியர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

**நல்ல பருவ மழையைத் தேவன் தர...**

◎ இந்த வருடம் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் தேவையான அளவுக்கு மழை பெய்யவும், நம் பீல் மக்கள் விவசாயத்தின் மூலமாக ஆசீர்வதிக்கப்படவும், அவர்களை தேவன் பொருளாதாரத்தில் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் கிராம ஆலயங்கள்...**

◎ கர்த்தருக்கு சித்தமானால், இவ்வருட இறுதிக்குள், 100 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள். கிராம சபைகள் கட்ட அனுமதிகள் சரியாக கிடைக்கவும், கட்டுமான வேளையில் எதிர்ப்புகள் நீங்கவும், தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறவும், ஸ்தலசபைகள் உற்சாகமான காணிக்கை தந்து உதவிபுரியவும் ஜெபியுங்கள்.

**ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக...**

◎ ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கிவரும், மிஷனெரி ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், கிராம ஆதரவாளர்கள், ஆலயக் கட்டுமான ஆதரவாளர்கள், ஷாலோம் பங்காளர்கள் மற்றும் அநேக காரியங்களை அவ்வப்போது தாங்கிவரும் ஆதரவாளர்கள், மாதந்தோறும் தங்களால் இயன்ற காணிக்கைகளைக் கொடுத்து ஊழியங்களைத் தாங்கி வரும் ஆதரவாளர்கள் அனைவரையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

◎ ஆதரவாளர்கள் செய்கின்ற வேலைகள், தொழில்கள் வியாபாரங்கள் மற்றும் ஊழியங்கள் அனைத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகளை சந்திக்கவும், பொருளாதார பிரச்சினைகள் மாறவும், வீட்டில் சந்தோஷம் சமாதானம் நிலவவும் அவர்கள் பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ ஆதரவாளர்களில் தேவைகளோடு காத்திருப்போருக்காகவும், வேலைக்காக காத்திருப்போருக்காகவும், திருமணத்திற்காக காத்திருப்போருக்காகவும், குழந்தைச் செல்வங்களுக்காகக் காத்திருப்போருக்காகவும், பொருளாதாரத்தில் கஷ்டப்படுவோருக்காவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் ஊழியங்களைத் தாங்கிவரும், ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், சபைகளுக்காகவும், ஜெபியுங்கள் ஊழியங்களில் பெரிய அறுவடையை தேவன் கொடுக்கவும், ஊழியத் தேவைகளை சந்திக்கவும், அவர்கள் சபைகளை தேவன் கட்டவும் ஜெபியுங்கள்.

◎ நமது ஊழியங்களுக்காக காணிக்கைகளை சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், ஊழியங்களை ஜெபங்களினாலும், ஆலோசனைகளினாலும் தாங்கிவரும் செயற்குழு உறுப்பினர்களுக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காவும் ஜெபியுங்கள்

**ஊழியங்களில் வரும் தடைகள் நீங்க...**

◎ ஊழியங்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக வரும் மனுஷீக வல்லமைகள், எதிர்ப்புகள், போராட்டங்கள் மேலும் அந்தகாரத்தின் கிரியைகள், விரோதமாக செயல்படும் அதிகாரங்கள் நீங்கவும் ஊழியர்களுக்கு தேவன் நல்ல பாதுகாவலைத் தரவும் ஜெபியுங்கள்.

# வெள்ளி விழாவை நோக்கி ஷாலோம் மிஷனெரி பணி.... (2015ல்)

## இன்னும் 36 மாதங்கள்....

“அற்பமான ஆரம்பத்தை யார் அசட்டை பண்ண கூடும்” என்ற வசனத்தின்படி பீல் மக்கள் மத்தியில் தேவன் தந்த தரிசன பணியை 22 ஆண்டுகள் நிறைவேற்ற தேவன் தந்த கிருபைக்காகவும், உங்கள் யாவரின் ஜெபங்கள், அன்பு நிறைந்த தியாகமான காணிக்கைகளுக்காக தேவனைத் துதித்து உங்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**“சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது”. பிலிப்பியர் 4:3**

இன்னும் 36 மாதங்களில் (July 2015) நம் ஷாலோம் பணிகளின் வெள்ளிவிழாவை அதாவது 25 வருடங்களை முடிக்க போகிறோம். தேவ பாதத்தில் நான் காத்திருந்து ஜெபித்தபோது எனக்குள் மிகுந்த ஆத்தும பாரம் உண்டானது. 2015 இலக்கு உள்ளாக 1000 சபைகளை உருவாக்கவும், 1000 பீல் சுதேச ஊழியர்களை பயிற்றுவிக்கவும் 10 இலட்சம் ஆத்துமாக்களை நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட அர்ப்பணித்துள்ளோம்.

இதுவரை தேவன் தந்த 600க்கும் அதிகமான சபைகளை, 500 சுதேச ஊழியர் குடும்பங்களை, 4500 சபை மூப்பர்களை, 23000 விசுவாச குடும்பங்களில் உள்ள விசுவாசிகளையும், வாலிபர்களையும், சிறுவர்களையும் தேவனுக்காக 36 மாதங்கள் ஆத்தும பாரத்துடன், தரிசனப்பணியை நிறைவேற்ற ஜெபித்து சிறப்புத் திட்டங்களை பணித்தளங்களில் நடத்த உள்ளோம். பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட ஜெபியுங்கள்.

அப்படி 36 மாதங்கள் பணித்தளத்தில் ஊழியங்களை நிறைவேற்ற எங்களுடன் தீவிரமாக இணைந்து செயல்பட உங்களை குடும்பமாக, சபையாக, குழுவாக அன்புடன் அழைக்கிறோம். குறிப்பாக கீழ்க்காணும் நிதி தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்து செயல்பட முன்வாருங்கள்

| | | | |
|---|---|---|---|
| ★ | **ரூ. 2000/– மாதம்** | **மிஷனெரி ஆதரவு** | **500 பேர்** |
| ★ | **ரூ. 600/– மாதம்** | **குழந்தை ஆதரவு** | **250 பேர்** |
| ★ | **ரூ. 500/– மாதம்** | **கிராம ஆதரவு** | **1000 பேர்** |
| ★ | **1 இலட்சம், 2 இலட்சம் நிதி உதவி** | **கிராம ஆலயம்** | **100 பேர்** |

- ★ **இம்மிஷனெரி பணியை தயவாக உங்கள் உறவினர், நண்பர்களுக்கு குறைந்தது இரண்டு பேருக்காவது அறிமுகம் செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.**
- ★ **உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதியாக பணிபுரிந்து ஊழியர்களை அறிமுகம் செய்து, காணிக்கை சேகரித்து அனுப்பவும் அன்புடன் வேண்டுகிறேன்.**

---

**“எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்”. நெகேமியா 2:18**

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

---

AXIS BANK (U.T.I)

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank

**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

*ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.*

## நாட்டு நடப்புச் செய்திகள்....

**13.06.2012** அன்று ஆந்திரப்பிரதேசத்தில் வைசாக் இரும்பு எஃகு ஆலையில் நடந்த வெடி விபத்தினை தொடர்ந்து ஏற்பட்ட தீ யில் **11** பேர் கொல்லப்பட்டனர். அந்த ஆலையில் நிறுவப்பட்டிருந்த பதிய உபகரணங்களை தொழிலாளர்கள் பரிசோதனை செய்து கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது. தொழிற்சாலைக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் கூட உயரத்தில் தூக்கி எறியப்பட்டுள்ளன.

---

பிரிட்டனில் தனது **83**வது வயதில் சிறுநீரகத்தை தானம் செய்ததன் மூலம் பிரிட்டிஷ் மருத்துவ உலகில் நிக்கோலஸ் கிரேஷ் என்பவர் ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளார். அவரது சிறுநீரகம் **40** வயதுக்காரர் ஒருவரது சிறுநீரகத்தைப் போல வேலை செய்ததைக் கண்டுபிடித்த டாக்டர்கள் அவருக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளனர்.

---

மாஸ்கோவில் கடந்த **30.05.2012** அன்று நடைபெற்ற உலக சதுரங்க சாம்பியனுக்கான சதுரங்க போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் இஸ்ரேலின் போரிஸ் கெல்ஃபாண்டை **2.5 – 1.5** என்கிற கணக்கில் வென்று உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை தக்கவைத்தார். இந்தியாவைச் சார்ந்த விஸ்வநாதன் ஆனந்த் மொத்தம் ஐந்து முறை உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

கொழுப்புத் திசுவில் இருந்து மனித எலும்பினை இங்கிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். எலும்பு முறிவு ஏற்பட்டால் அதற்கு பதில் இந்த கொழுப்பு திசுவால் உருவாக்கப்பட்ட இந்த எலும்பைப் பொருத்தியோ அல்லது எலும்பு உடைபட்ட இடத்தையோ சரி செய்யலாம்.

நன்றி : www.dailythanthi.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம்
# ரோகன்யா மன்னா
## இராஜஸ்தான்



இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் ஒரு சிறு கிராமம்தான் ரோகன்யா மன்னா. இங்கு சிறு சிறு மலைகள் மற்றும் குன்றுகளுக்குள்ளே ஆங்காங்கே குடிசைகளும் ஓட்டுக் கூரை கொண்ட வீடுகளும் மறைந்து கிடக்கும். ஜனங்கள் கூலி வேலைக்குச் சென்றும், குஜராத்தில் பட்டணங்களில் வேலைக்குச் சென்றும் வாழ்ந்து வருகின்றனர். அதே நேரத்தில் குடிப் பழக்கம், திருடு, சண்டைகள், பில்லிசூனியக் கட்டுகள் போன்ற பாவங்களுக்கு அடிமைகளாக இருப்பவர்கள். இவர்களில் ஒருவர்தான் சகோ. துலாபாய் கராசியா. இவரது மனைவி சகோதரி மன்னா பேன் பிசாசின் பிடியினால் சிக்குண்டு, தற்கொலை எண்ணம் கொண்டவராகக் காணப்பட்டார். மேலும் அநேக முறை தற்கொலைக்கு முயற்சிகள் செய்துள்ளார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சகோ. துலாபாய் கராசியா மிகவும் மன வேதனையோடு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இவர் தனது சூழ்நிலையைக் குறித்து, கும்புரா கிராம சபையைச் சேர்ந்த விசுவாசியிடம் பகிர்ந்து கொண்டார். உடனே அவர் துலாபாயை சபைக்கு ஆழைத்து வந்து, போதகர் Rev. பத்தியா கராசியா அவர்களிடம் அறிமுகம் செய்தார். போதகர் இவருக்காக ஜெபித்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிவித்து, பரிசுத்த வேதாகமத்தை அவருக்கு வழங்கினார். மேலும் சகோ. துலாபாயின் வீட்டிற்குச் சென்று ஜெபித்ததின் விளைவாக தேவன் அந்த சகோதரிக்கு தற்கொலை எண்ணத்தில் இருந்து விடுதலை கொடுத்து அந்த குடும்பத்தை ஆசீர்வதித்தார். அதன்பின் முழு குடும்பமாக இரட்சிக்கப்பட்டு விசுவாசத்தில் வளர்ந்து வந்தனர். தேவனுடைய வழி நடத்துதல் மூலமாக சகோ. துலா கராசியா ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியப் பயிற்சியும், ஒரு வருட வேதாகமப் பயிற்சியும் பெற்று, தனது சொந்த கிராமமான ரோகன்யா மன்னா கிராமத்தில் தனது வீட்டிலேயே ஞாயிறு ஆராதனை நடத்த ஆரம்பித்தார்.

இங்கு 2000–வது ஆண்டில் மிகவும் எதிர்ப்புகள் நிறைந்து காணப்பட்டாலும், தற்போது, இந்த கிராமத்தில் 70% குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டன. இங்கு தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என்று உணர்ந்து இங்கு ஒரு புதிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 29.04.2012 அன்று பிஷப் தேவதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது.

இந்த கிராம ஆலயம் ***Mr. பார்த்திபன்*** (Madras Christian College School, Chetpat, Chennai.) அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டது.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2012-2014.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | ஆசீஸ் டாமோர் |
| தந்தையின் பெயர் | : | ஜெயச்சந்திர டாமோர் |
| தாயார் பெயர் | : | சந்தோஷ் தேவி |
| பிறந்த நாள் | : | 23.07.2004 |
| படிக்கும் வகுப்பு | : | 2ம் வகுப்பு |
| சொந்த ஊர் | : | காண்டுவன் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. ஜெயச்சந்திர டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவர் மிகவும் அதிகமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர். இந்த குடி பழக்கத்தில் இருந்து இவரால் விடுபட முடியவில்லை. மேலும் பிசாசின் பிடியிலும் சிக்குண்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவரை விடுவிக்க யாருமே இல்லை என்ற சூழ்நிலையில் மிகவும் மனம் நொந்து காணப்பட்டார்.

அந்த சூழ்நிலையில், ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தேவன் அவரை குடிப்பழக்கத்தில் இருந்தும், பிசாசின் பிடியில் இருந்தும் விடுவித்து ஆசீர்வதித்தார்.

**மாணவனைக் குறித்து :–** ஆசிஸ் நன்றாக படிப்பான். விளையாட்டில் நல்ல ஆர்வமுடையவன்.

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற வேலைகளுக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** *Mr. Joshua Ponraj - Thoothukudi.*

நீங்களும் மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 259 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss